பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆடி 23 ஜுலைகஸ் 9 இதழ் 174
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 7-8-84

## தத்தம் வீடுகளிலேயே தங்கியிருக்கவும் அரசு கோரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்து மக்களை தத்தம் வீடுகளிலேயே தங்கியிருக்குமாறு அரசாங்கம் கேட்டுள்ளது.

பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை முறியடிக்க பாதுகாப்புப்படையினர் கடும்நடவடிக்கைகளை எடுக்கவிருப்பதால் யாழ்ப்பாணத்து மக்கள் தத்தமது வீடுகளிலேயே தங்கியிருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## வவனியாவில் பொலிஸ் அதிகாரி பலி!

இதேவேளை வவனியாவில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவமொன்றில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டதாக ராஜாங்க அமைச்சு தெரிவித்தது.

(6-ம் பக்கம் பார்க்க)

# வல்வெட்டித்துறைச் சம்பவம்:

# அகதிகள் பாடசாலையில் தஞ்சம்

(காரியாலய நிருபர்)

வல்வெட்டித்துறையில் நேற்று முன்தினம் நிகழ்ந்த அசம்பாவிதச் சம்பவங்களைத் தொடர்ந்து ஆயிரத்துக்கும் அதிகமான அகதிகள் பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

வல்வெட்டித்துறை, பொலிகண்டி, ஊறணி, ஊரிக்காடுஆகிய இடங்களிலிருந்து ஏராளமான குடும்பங்கள் அகதிகளாக வெளியேறி, கம்பர்மலை, புலோலி, கரணவாய், கரவெட்டி, அச்சுவேலி, கதிரிப்பாய் ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம், அரச அதிகாரிகளுடன் நேற்று மேற்படி இடங்களுக்குச் சென்று நேரில் நிலைமையை அவதானித்தார். தமிழ்அகதிகளுக்கு ஊர் மக்கள் உணவு, குடிநீர்வசதிகளை அளித்து வருகின்றனர்.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் 50 வீதமான வீடுகள், கடைகள் முற்றாகத் தாக்கப்பட்டும், எரிக்கப்பட்ட நிலையிலும் காணப்பட்டன.

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடிப்பிள்ளையார் கோவில், நெடியகாடு மகளிர் கல்லூரி முற்றாக எரிக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலைமுதல் இரவு வரை பயங்கரக்குண்டுவெடிப்புச் சத்தங்களும் அவற்றுக்கிடையே தொடர்ந்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டவண்ணம் இருந்தன.

கடற்பகுதியிலிருந்தும், தரைப்பகுதியிலிருந்தும்பீரங்கி வேட்டுக்கள், கட்டிடங்களை நோக்கித் தீர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

வல்வெட்டித்துறையிலிருந்து - பருத்தித்துறை வரை கடற்கரையோரமாக வ. போ. ச. பஸ்சேவை பட போக்குவரத்துசேவைகளும் நடைபெறவில்லை,

இப்பகுதிகளில் நிலவிய பதட்டநிலை காரணமாக அதிகமான குடும்பங்கள் இடம் பெயர்ந்து வேறு பகுதிகளில் உள்ள உறவினர் வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இச்சம்பவம் காரணமாக பல நூற்றுக்கணக்கானோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

அகதிகளாக்கபபட்டு வேறிடங்களில் தஞ்சம் புகுந்திருக்கும் குடும்பங்கள், உணவு, குடிநீர் போன்றவற்றுக்குக்கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொதுமக்கள் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருப்பவர்களுக்குக் கூடியளவு உணவுகள் வழங்கிவருவதாக எமது நிருபர்கள் தெரிவிக்கின்றனர்.

(மா)

## தீவிர கண்காணிப்பு பிரதேசமாக பிரகடனம்

(கொழும்பு)

வல்வெட்டித்துறைப் பிரதேசம் தீவிர கண்காணிப்புப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இருதினங்களுக்குமுன் அப்பகுதியில் கடற்படையினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையில் நடந்த மோதலையடுத்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையில் நேற்று உத்தியோகபூர்வமற்ற ஊரடங்கு அமுல் செய்யப்பட்டுள்ளது.

## இலங்கை - இந்திய கூட்டு விசாரணை சாத்தியமில்லை!

### இந்திய அரசு அறிவிப்பு

(புதுடில்லி)

சென்னை விமான நிலைய குண்டுவெடிப்பு சம்பவம் குறித்து இந்தியாவும் இலங்கையும் கூட்டாக விசாரணை நடத்துவதற்கு சாத்தியமில்லை என்று இந்திய அரசு அறிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று

(6ம் பக்கம் பார்க்க)

## எம். ஜி. ஆருக்கு பலத்த பாதுகாப்பு

[சென்னை]

தமிழ்நாடு அமைச்சர்களின் உயிருக்கு ஆபத்து என்று அனாமதேய தொலைபேசி அழைப்பின் மூலம் தமிழ்நாடு தலைமைச் செயலாளர் அலுவலகத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனுக்கும், ஏனைய தமிழ்நாடு அமைச்சர்களுக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக உள்துறை செயலாளர் திரு. வெங்கட்ராமன் தெரிவித்தார்.

(வெ)

முந்துங்கள்

# மலிவு விற்பனை

விற்றுத்தீர்ப்பதற்காக நம்பமுடியாத அளவு குறைந்த விலைகளில் உங்கள் இல்லங்களுக்கு என்றும் தேவையான பாவனைப் பொருட்கள்.

எவர்சில்வர் சாமான்கள், கிளாஸ் வகைகள், பிளாஸ்டிக் பொருட்கள், பிளாஸ்டிக் பூக்கள், சுவர் மேசைக்கைக்கடிகாரங்கள், வானொலிப் பெட்டிகள், கெசட்டுகள், வீடியோ கசெட்டுகள், சுடுதண்ணீர்ப் போத்தல்கள், ஹொட்பிளேட், அயன்பொக்ஸ், மின்விசிறிகள், சேக் தயாரிககும் அவன்கள், எலக்ரிக் கேத்தல்கள், றைஸ் குக்கர், காஸ் குக்கர், கெரசின் குக்கர், பாடசாலை உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள், வீட்டு அலங்காரப் பொருட்கள் இன்னும் பற்பல.

நீங்கள் என்றும் எங்கும் வாங்கமுடியாத குறைந்த விலைகளில் விற்றுத்தீர்ப்பதற்காக விற்பனை செய்யப்படுகின்றன.

விரைந்து வாருங்கள்

பிரவுன்சன் ரேட் சென்டர்

''கூட்டுறவுக் கட்டிடம்''

கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22061

1253

ஒட்டுசுட்டான் சம்பவம்:

## தாக்குதலை நடத்தியவர்கள் சீருடையில் வந்தனராம்

(ஒட்டுசுட்டான் வவனியா நிருபர்கள்)

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத் தாக்குதலில் முதியான்சே கோனமடுவ என்ற உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டரும், கிருஷ்னசாந்தா என்ற பொலிஸ் கான்ஸ்டபிளுமே பலியானவர்களாகும்.

காயமடைந்த கான்ஸ்டபிள்களான சமரவீர, விஜயரத்ன விஜயானந்த ஆகிய மூன்று கான்ஸ்டபிள்களும் வவனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டு அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

(6ம் பக்கம் பார்க்க)

## மீனம்பாக்கம் சம்பவம்: சிகிச்சைபெற்ற நபர் திடீர் மறைவு! குண்டு வெடிப்புடன் சம்பந்தப்பட்டவரா?

சென்னை, ஆக. 6

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச சம்பவத்தில் காயமடைந்து சென்னை மத்திய மருத்துவ நிலையத்தில் சிகிச்சை பெற்றுவந்த நபர் ஒருவர் அங்கிருந்து காணுமல் போய் விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் சிகிச்சைக்குள்ளான அந்த நபரைத் திடீரெனக் காணவில்லை என்று வைத்திய நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி நபர் திடீரென காணுமல் போனதன் காரணம் மர்மமாகவே இருக்கின்றது,

(6ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கி சூட்டுக்கு சிறுவன் பலி!

[யாழ்ப்பாணம்]

வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த 12 வயதுச் சிறுவனை கொட்டடியைச் சேர்ந்த க. ஜெகநாதன் துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியானார்.

நேற்றுமுன்தினம் மாலை யாழ். நகரில் பதட்டநிலை ஏற்பட்டபோது மாலை 5 30 மணியளவில் இச்சிறுவன் பலியான

(6-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

North town Chicks. Cross Broilers-4-50. சேவல் குஞ்சு-1-65, பேட்டுக்குஞ்சு வெள்ளை, சிவப்பு-8-75. நாலு நாள், கிழமைக்குஞ்சுகளும் ஓடருக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: ராதாகிஷ்ணூஸ், 392, நாவலர் வீதி, கயிலாச பிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம். 1190

யாழ்ப்பாணம் (Town) காங்கேசன்துறை வீதியில் மேல் மாடியுடன் கூடிய வியாபாரக் கட்டிடம் உடனடியாக விற்பனைக்குண்டு. எந்த விதமான வியாபாரம் செய்வதற்கும் உகந்தது. விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 1248 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1248

சில்லாலை சென். செபஸ்ரியன் ஒழுங்கையில் இரண்டாவதாக இருக்கும் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் (கொடுக்கப்படும்) துண்டுகளாகவும் விற்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: K. ஞானசேகரன், சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு. (1252)

நாஷனல் NR 232 TE மொடல் குளிர்சாதனப் பெட்டி—நாஷனல் வக்கூம் கிளீனர்—பிறதர் ஆங்கில ரைப்றைட்டர் — மின்சார டபிள் பேணர் அடுப்பு — வெல்டிங் / மோட்டார் சைக்கிள் மூக்குக்கண்ணடிகள் யசிக்கா FX3/MEI கமருக்கள் — வெல்வெற் கம்பளம் Black and Decker with Complete Straight Shank Twist — கிறில்ரில் உளிகள் — நிச்சிதையல் மெசின்—கார்சீற்—கவர்கள் இவைகள் எல்லாம் புத்தம்புதியன இன்னும் அநேக பொருட்கள், விபரங்களுக்கு: முத்திரைக் கவருடன் விண்ணப்பிக்கவும். கார்த்திகேசு, ஏலவிற்பனை நிலையம், கோப்பாய். (1250)

## தேவை

விற்பனை செய்வதற்குச் சகலவித பொருட்களும் தேவை, அவை புதியனவாயினும் அல்லது பழையவையாயினும் விபரங்களுக்கு முத்திரைகவருடன் விண்ணப்பிக்கவும்: கார்த்திகேசு ஏலவிற்பனை நிலையம் கோப்பாய். 1188

வீடியோ கமிராவினல் படப்பிடிப்புகள் செய்ய நன்கு அனுபவமுள்ள ஒரு கமிராமென் (Camera men) தேவை. அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும். 12-8-84 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். சினிஸ்ரார் வீடியோ கிளப் சன்லைட் றைக்கிளினேர்ஸ் 23, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 1242

### இரண்டாவது மன்றம்:

# முஸ்லிம் கவுன்ஸில் யோசனைகள்பற்றி ஜனுதிபதி விளக்கம்

(கொழும்பு)

மாகாண சுயாட்சியுடன் இணைந்தவகையில் இரண்டாவது மன்றத்தை அமைப்பது தொடர்பான யோசனையை விரிவான விளக்கங்களுடன் சமர்ப்பிக்குமாறு ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன முஸ்லிம்கவுன்ஸில் தூதுக்குழுவிடம் கோரியுள்ளார்.

நாட்டின் தற்போதைய பிரச்னைக்கு இரண்டாவது மன்றம் மட்டும் தீர்வுஆகாது என்று வலியுறுத்திய முஸ்லிம் கவுன்ஸில், மாகாண சுயாட்சியுடன் இணைந்ததாக இரண்டாவது மன்றம் அமைவது என்று சுட்டிக்காட்டியபோதே ஜனுதிபதி மேற்கண்டவாறு அவர்களிடம் கோரியுள்ளார்.

முன்னுள் கல்வி அமைச்சர் கலாநிதி அல்ஹாஜ்பதியுதீன் மஹ்மூது, சட்டத்தரணி ஜனுப் எம். எச். எம். அஷ்ரல், ஆகியோர் கடந்த வெள்ளிக்கிழமை ஜனுதிபதியுடன் பேச்சு வார்த்தை நடத்திஞர்கள்.

தற்போதைய பிரச்னைக்கு மாவட்டசபை தீர்வுஆகாது என்றும் பரந்த அடிப்படையில் கூடுதலான அதிகாரங்களுடனுன சபையே பிரச்னைக்கு தீர்வுகாண உகந்தது என்றும் முஸ்லிம் கவுன்ஸில் உறுப்பினர்கள் வலியுறுத்திஞர்கள், மாகாண சுயாட்சியுடன் இணைந்ததாக இரண்டாவது மன்றத்தை அமைத்து அதற்கு எந்த ரீதியில் பிரதிநிதிகளை தெரிவுசெய்யலாம் என பேச்சு வார்த்தையில்கலந்துகொண்ட வெளிவிவகார அமைச்சர் ஜனுப் ஏ. ஸி. எஸ். ஹமீட் கேள்வி எழுப்பிஞர்.

இதற்கான திட்டத்தை தரலாம் என்று தூதுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## புதிய நிர்வாகிகள்

[சுழிபுரம்]

சுழிபுரம் மேற்கு கிராமமுன்னேற்றச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் சங்கமண்டபத்தில் நடைபெற்றது. புது வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்: க.கணபதிப்பிள்ளை, உப தலைவர்கள்: பொ.சண்முகலிங்கம், வ.கனபதிப்பிள்ளை, செயலாளர்:சி. வைத்தீஸ்வரன், உப செயலாளர்: சி.கேசவன், தனுதிகாரி: பொ.கார்த்திகேசு,

செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப் பட்டனர்.

## பிறந்தநாள் வாழ்த்து

### செல்வி இ. ஜெயலலிதா (ஜெயா)

புதுககுடியிருப்பு ஆனந்தபுரத்தில் வசிக்கும் இராமச்சந்திரன் இராஜேஸ்வரி தம்பதிகளின் செல்வப்புதல்வி ஜெயலலிதா இன்று தனது எட்டாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிருர். இவரை அப்பா, அம்மா, தங்கைகள், உற்ருர், உறவினர், நண்பர்கள் பல கலைகளும் கற்று அன்பிலும் பண்பிலும் அறிவிலும் சிறப்புற்று பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துகிருர்கள், (1240)

## ஹைதராபாத் பயணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கச்சேரி உதவி அரசாங்க அதிபர் எஸ். அமிர்தலிங்கம் இந்திய அரசின் புலமைப்பரிசில்பெற்று குறுகிய கால பயிற்சி ஒன்றை மேற்கொள்ளும் முகமாக ஹைதராபாத்செல்லவுள்ளார்

## 6 மாதங்களுக்கு தேவையான பால்மா

[புலோலி]

இலங்கை குடும்பத் திட்டச் சங்கம் யாழ். மாவட்டத்தில் மாதிரிக் கிராமங்களாகத் தெரிவுசெய்த ஐந்து கிராமங்களில் உள்ள சிறுவர் பாடசாலை மாணவர்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் 6 மாதங்களுக்குத்தேவையான பால்மா வகைகளை வழங்கியுள்ளது.

பத்தைமேனி, திடற்புலம், கல்லாரை, இயற்ருலை, வதிரி ஆகிய கிராமங்களில் உள்ள சிறுவர் பாடசாலை மாணவர்களுக்கே செஞ்சிலுவைச் சங்கம் இப்பால்மாவகைகளை வழங்கியுள்ளது. அந்தந்த மாதிரிக் கிராமங்களில் உள்ள குடும்பத்திட்ட மகளிர் அபிவிருத்திக் குழுக்களே பொறுப்பாகவிருந்து மாணவர்களுக்கு இப்பால்மா வகைகளை விநியோகித்து வருவதாக இலங்கைக் குடும்பத் திட்டச் சங்க யாழ். மாவட்ட திட்டமிடல் அதிகாரி திரு. ஏ. எஸ். பூவேந்திரன் தெரிவித்தார்.

## வேப்ப மரத்தில் கள்ளு வடிகிறது

[வேலணை]

வேலணை கிழக்கில் உள்ள திருநாவுக்கரசு என்பவரின் வீட்டிற்கு முன்னுல் உள்ள வேப்பம் மரத்தில் கள்ளு வடிந்து கொண்டிருக்கிறது.

ஒரு நாளைக்கு மூன்று போத்தல் வரை இக் கள்ளு சேகரிக்கப்பட்டு வருகிறதாம். இரவு பகலாக இக் கள்ளு வடிந்து கொண்டிருக்கின்றது

கிட்டத்தட்ட இக் கள்ளு வடியத் தொடங்கி எட்டு மாதங்களுக்கு மேலாக ஆகின்றதாம் ஆனுலும் இந்த வேப்பம் மரத்தில் இன்றுவரை கள்ளு வடிந்து கொண்டேயிருக்கிறது.

இவ் விடயத்தை பொது மக்கள் சென்று பார்த்து வருவதுடன் விவசாயப் பகுதியினரும் சென்று இவ் வேம்பின் கள்ளைப் பரிசோதனைக்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

(கி)

## வீணைப்பரீட்சைக்கு பரிசு

(கல்வியங்காடு)

வட இலங்கை சங்கீதசபையினரின் 'வீணை' பரீட்சைகளில் சித்தியெய்திய முதல் தர மாணவர்களுக்கு சங்கீத பூசணம் திரு.எஸ்.ஆறுமுகம் பிள்ளை (வீணை) அவர்கள் வழங்கி உள்ள நன்கொடையில் இருந்து பரிசில்கள்வழங்கப் படவுள்ளன.

வட இலங்கை சங்கீதசபையினர் வருடாவருடம் நடாத்தும் நடனம், சங்கீதம், வீணை போன்ற பரீட்சைகளில், வீணை பாடத்தில் சித்தி பெறும் ஒவ்வோர் தரத்திலும் உள்ள முதல் தரமான மாணவர்களுக்கு இப் பரிசில்கள் வழங்கப் படுகின்றது. (கி)

### ★ கிளிநொச்சி தனிமாவட்டம்

# ஆனுலும் பதிவாளர் அலுவலகம் இல்லை!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தனிமாவட்டமாக பிரிந்து பல மாதங்களாகியும் பதிவாளர் அலுவலகம் இங்கு ஆரம்பிக்கப்படாமையால் பொது மக்கள் மிகுந்த சிரமம் அடைவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள மக்கள் பதிவு சம்பந்தப்பட்ட தமது அலுவல்களுக்கு யாழ்ப்பாண பதிவாளர் கந்தோருக்கே செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கான பதிவாளர் அலுவலகம் ஆரம்பிக்குமுகமாககிளிநொச்சி விற்பனைத் திணைக்களத்திற்கு பின்பாக உள்ள கட்டிடம் ஒன்று ஒதுக்கப்பட்டு அக்கட்டிடத்தை இரண்டுகாவலாளிகள் இரவு பகலாக காவல் காத்து வருகின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது விடயத்தில் கவனம் செலுத்தி பதிவாளர் கந்தோரை திறப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென வேண்டப்படுகிறது.


வருடமொன்றுக்கு உங்கள் மூலதனத்திற்கு

**27%** தொடக்கம் **30%** வரை

வட்டி பெற்றுக்கொள்ளுங்கள்.

குறைந்த தொகை ரூபாய் ஆயிரம் (1,000/-)

எந்நேரமும் அறிவித்தலின் பின்

பணத்தைத் திருப்பிப் பெறலாம்.

விபரங்களுக்கு:

JAFFNA PROPERTY TRADES LTD.

3, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

போன்: 23698


## அகதிகளுக்குப் புனர்வாழ்வு

யக்கச்சி சந்திக்கருகாமையில் அமைந்த வீட்டுத் திட்டத்தில் குடியிருப்பதற்கு ½ ஏக்கர் காணியும் இரண்டு அறைகள் கொண்ட கல்வீடும் தெரிவாகும் குடும்பங்களுக்கு கொடுக்கப்படும். தெரிவாகும் குடும்பங்களுக்கு சுயதொழில்செய்வதற்காக ரூபா 10,000 வரை கடனுதவியும் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் உதவிபெற விரும்பும் அகதிகள் கீழ்காணும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்.

காரியதரிசி

வை. எம். சி. ஏ.

யாழ்ப்பாணம்.

1219


UNIQUE COMMUNICATION SERVICE

# யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்

## 24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்

28/18 - 1/1 மகாத்மா காந்தி ரேட்.

(சலுசலவுக்கு அனமையில்)

யாழ்ப்பாணம்.

ரெலெக்ஸ்: - 22285 PERIMR CE

தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்

அவுஸ்திரேலியா கட்டிடம

த.பெ.1917, 54 யோர்க் வீதி, கொழும்பு :

ரெலெக்ஸ.- 21652, 21742 21918 21931, PERIMR CE

தொலைபேசி:- 22726 547884, 548626, 549065, 549066


# VACANCY

## Resident Medical Officer-MBBS

Applications are invited from service oriented Doctors with an interest to develope a growing Hospital in the Northern Peninsula which has two permanent Clinics in the near by villages.

This Hospital is managed by the 'Lions Club'

Closing date of application: 20th August 1984,

Address applications to:

CHAIRMAN
Lions Hospital,
Vallai, Uduppiddy, Valvettiturai.

(1249)

### மணிவாக்கு

தன்னுடைய முள்ளுக்காக நாணி, மன்னிப்புக் கேட்கும் பொருளல்ல ரோசா மலர். அதனிலும் பார்க்க பலபடி உயர்ந்த படைப்பு அது.

— இரவீந்திரநாத் தாகூர்.

## நமது நோக்கு

### ஒழுக்கம்

## பௌத்தத்தின் உயிர்

ஒழுக்கம் தவறாமல் வாழ்வதாலேதான் மனிதன் உயிர் வைத்துக் கொண்டிருப்பதற்கு பொருள் உண்டு. ஒழுக்கம் தவறினால் அதை விடச் சாவதே நல்லது.

தன்னைத்தான் காத்துக் கொள்வதே உயிரின் இயற்கை. உடல் உயிரைக் காப்பதுபோல், பண்பட்ட மனிதன் ஒழுக்கத்தைக்காப்பதில் முனைந்து நிற்பது உயிரைக் காட்டிலும் ஒழுக்மானதுவிலையுயர்ந்த பொருளென்பதால்.

இன்று கொழும்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் உலக பௌத்த மகாசம்மேளனத்தின் 14-வது வருடாந்த மகாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி ஜெயவர்த்தன இந்நாட்டின் பித்தம் தெளிய மருந்தொன்றிருக்கிறதைக்குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த மருந்து அதிகம் உபயோகத்தில்இல்லாததுபற்றி உலகின் மற்றைய பௌத்த நாடுகள், சங்கங்கள் மட்டுமல்ல அகில உலகுமே அதிர்ச்சியடைந்திருக்கிறது தர்ம தீபத்துக்கு நடந்ததென்ன என்பதே உலகின் விசனம்.

பௌத்த கலாசாரத்தில் ஊறியிருக்கும் சிங்கள மக்களும், பௌத்தபோதனைக்கு சமமான திருவள்ளுவரின் திருக்குறளைப் பொதுமறையாகக் கொள்ளும் தமிழ் மக்களும் இன்று வாழும் நிலை அகில உலக பௌத்த மாநாடோ, அகில உலக இந்து மாநாடோ மக்கள் வாழ்வில் மாற்றம் ஏற்படுத்தவல்லதா என்ற சந்தேகத்தைகிளப்பிவிட்டிருக்கிறது.

தற்காலத்தில் ஒழுக்கத்துக்குப் பாதுகாப்பு முக்கியமாக அரசாங்கச் சட்டமென்று வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்துகிறோம். அதனை மீறினால் அரச தண்டனைக்குக்காத்திருக்கிறோம்.

இந்த முறையே இன்று பிசுபிசுத்துவிட்டதை அண்மையில் மறியல் சாலையில் நடந்த சம்பவங்கள் நிரூபிக்கின்றன.

புத்தபிரான் காலத்தில், வள்ளுவர் காலத்தில், சமூகத்தின் ஒழுங்குப்பாடு மீறி யாரேனும் நடந்து கொண்டால் பழி எய்துவார், அதுவே அக்காலத்தில் கடுந்தண்டனையாக விருந்தது.

இன்று நாம் அக்கால சமூக வாழ்க்கையைத்தேடி பின்செல்வது அசாத்தியம்; இன்றைய சமூகமாற்றங்களுக்கமைய, தத்தம் கடமைகளைத் தாமே செய்ய அவற்றைத் தொட்டு உரிமைகள் தாமே கைவர, ஒழுக்கம் இன்றும் இன்றியமையாதது.

மனித வாழ்க்கையில்—குடும்ப, சமூக,தேசிய வாழ்வில் ஒழுக்கம் குன்றுமானால் அது சமயத்தின் செல்வாக்கு குன்றிவிட்டதைக் குறிக்கும்.

## பட்டம் மட்டம் தட்டுகிறது?

தரப்படுத்தல் வடபகுதி மாணவர்களை, கல்லூரிகளை மட்டந்தட்டி, ஈற்றில் 'தரைப்' படுத்திவிட்ட சோகக்கதை இன்று மயான காண்டத்தை நோக்கித் தொடர்கிறது.

பட்டதாரிஆசிரிய புராணபடனமும் அதேபோக்கில் நடைபெறுகிறது. இது என்ன மாறாத நோயா? அமைச்சரவையின் அந்தரங்க திட்டங்களா? அல்லது நிர்வாக சிவத்த நாடாவின் கட்டுப்பாடும் கண்டிப்புமா?

அண்மையில்நடைபெற்ற பட்டதாரி ஆசிரியர் நியமனத்தில் தமிழ்மொழி மூலம் கற்பிக்+ம் மனையியல் பட்டதாரிகளுக்கு 100 வெற்றிடங்கள் உண்டு. இருந்தபோதிலும் இந்தியாவில் மனையியல் பட்டம் பெற்ற இருவருக்கே ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மிகுதியான வெற்றிடங்களுக்கு குறைந்த தராதரத்துடன் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்ய கல்வி அமைச்சு கல்விச் சேவைக் குழுவுக்கு அனுமதி அளித்துளளது.

இந்த அனுமதி மனையியல் பட்டமோ டிப்ளோமாவோ பெற இயலாத தமிழ் மாணவிகளுக்கு எவ்வாறு உதவும்? பாடசாலை வெற்றிடங்கள் எவ்வாறு நிரப்பப்படும்?

சிங்கள மாணவிகளுக்கு தெகிவளை பல்தொழில் நுட்பக் கல்லூரியில் இவ்வித டிப்ளோமாபெற வழிசெய்யப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல்தொழில் நுட்பக்கல்லூரி இல்லாமலில்லை, மனையியல்துறை அங்கு தேவையில்லையென்று அமைச்சு நினைத்திருக்கலாம்.

அது எவ்வாறாயினும் நியமனத்தில் பாகுபாடு காட்டுவது இன்று பெருத்துவரும் புண்ணில் புளிவிட்டது போலாகும்.

ஞான, கணித ஆசிரியர்கள் நியமனததில் இப்பா ங்களை ஜீ. சீ. ஈ. உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு சலுகை வழங்குவதுபோல் இப்பரீட்சையில் மனையியல் பாஸ் உடைய தமிழ் மாணவிகளுக்கு தகைமைக்கேற்ப தெரிவுசெய்து வெற்றிடங்களை நிரப்புவது நியாயமாகும்.

### இன்று குருதேவர் தாகூரின் நினைவுதினம்

## மகாகவியும் கீதாஞ்சலியும்

இந்தியாவின் இலக்கிய மறுமலர்ச்சியிலும் விடுதலைப் போராட்டத்திலும் வங்காளத்துக்குக் குறிப்பிடத்தக்க பங்கு உண்டு.

ராமகிருஷ்ண பரமஹம்சரின் ஆன்ம ஒளி உலக முழுவதும் பரவி நிற்கிறது. 'எழுந்திடுக! விழித்திடுக! கருதிய காரியம் கை கூடும் வரை உழைத்திடுக'' என்று வீர முழக்கம் செய்த விவேகானந்தர் வங்காளிதானே!

காளிதாசனுக்கும் கம்பனுக்கும் ஈடுசொல்லக் கூடிய மகாகவி ரவீந்திரநாத் தாகூரை வழங்கியதும் வங்காள மண்தான். கவிதைகளாலும், நாடகங்களாலும் மகாகவி உலகப் புகழ் பெற்றார். பாரதப் பண்பாடு ''மிக அரியது, மிகச் சிறந்தது; அதன் தோன்றலே நான்'' என்று உலகம் முழுவதும் பறைசாற்றினரே!

### குருதேவர்

காந்தி அடிகளும், ஜவகர்லால் நேருவும் உள்படத் தலைவர்களும் அறிஞர்களும் 'குருதேவர்' என்று போற்றிய மகாகவியின் பெருமையை இக்காலத்து மக்கள் அறிந்திருப்பது அவசியம்.

1910-இல் மகாகவி கீதாஞ்சலி என்ற புத்தகத்தை எழுதினார். பாடலால் இறைவணக்கம் செய்வதே 'கீதாஞ்சலி' அவ்வப்போது எழுதப்பட்ட கவிதைகளின் தொகுதியே இப்புத்தகம். வங்காள மொழியில் வெளிவந்த போது அது புகழ்பெறவே இல்லை.

### கீதாஞ்சலி

ஓய்வு நேரத்தில் இப்புத்தகத்தில் இருந்த சில பாடடுக்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். ஓய்வு முடிந்த பின் ஐரோப்பாவுக்குப் புறப்பட்டார்.

1912-இல் இங்கிலாந்து வந்த மகாகவியை பலபெரியோர் வரவேற்றனர். அவருக்கு அளித்த விருந்தொன்றில் மிக்க புகழ் பெற்ற கவிஞர் (ஐரிஷ்) ஈட்ஸ் (Yeats) கீதாஞ்சலிக் கவிதை ஒன்றைக் கம்பீரமாகப் படித்தார்.

### ஈட்ஸ்

அவையோர் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். 'அவர்கள் கவிதையை விரும்பவில்லை போலும்' என்று கவிஞர் எண்ணி வருத்த முற்றார்.

### 'ரவீந்திரதாசன்'

ஆனால் சபையோர் கவிதையின் இனிமையாலும் நேர்த்தியாலும் கிறங்கி மௌனமாக இருந்தார்கள் என்று பிறகுதான் அவருக்குத் தெரிந்தது. அன்று விருந்தில் அவரைச் சந்தித்த அனைவருமேஅவருடைய நண்பர்களானார்கள்.

### அகில உலகிலும் புகழ்

மகாகவியின் புகழ் இங்கிலாந்து முழுதும் பரவியது. கீதாஞ்சலியின் ஆங்கிலமொழி பெயர்ப்பு விரைவில் வெளிவந்தது. அதனால் கவிஞர் புகழ் ஓங்கியது. பல மேலைநாட்டு மொழிகளில் கீதாஞ்சலிமொழி பெயர்க்கப்பட்டது. இங்கிலாந்தில் முதலில் கௌரவிக்கப்பட்ட இந்தியக் கவிஞர் ரவீந்திரரே!

1913-ம் வருடம் சுவீடன் நாட்டின்''சுவீடிஷ் அக்கடமி'' அந்த ஆண்டின் நோபல் இலக்கியப் பரிசை கவிஞர் ரவீந்திரநாத் தாகூருக்கு வழங்கியது.

### நோபல் பரிசு

நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர் ரவீந்திரரே. வெளிநாட்டினர் புகழ்பாடுவதைக் கண்டபின்தான், இந்தியாவின்சர்வகலாசாலைகள் தெளிந்தன. இலக்கிய கலாநிதி, சேர் போன்ற பல விருதுகள் விரைந்தன.

நோபல்பரிசுத்தொகையான ஒரு லட்சம் ரூபாய் அவருடைய பல்கலைக்கழகமாகிய சாந்திநிகேதனுக்குப் பயன்பட்டது.

கவிமணி மலாய்நாட்டு யாத்திரை செய்த ஞான்று அவர்களை நேரில்கண்டுபேசும்பாக்கியத்தைப் பெற்றவர்களில், யாழ்ப்பாணம் காரைநகர்வாசியும்,சமூகத் தொண்டனுமான அமரர் மு. கு. சுப்பிரமணியம் கீதாஞ்சலியைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

### தமிழ்க் கீதாஞ்சலி

மலாய்நாடு ஜப்பானியர்களால் கைப்பற்றப்பட்ட போது அங்குள்ள தமிழ் மக்

(5ம் பக்கம் பார்க்க)

## நாளைய செய்தி இன்று

★ கைதடி அகதிமுகாம் ஓராண்டு பூர்த்தி வைபவம் நாளை புதன் கிழமை கொண்டாடப்படவுள்ளது. ஜூலைக் கலவரத்தில் உயிர், உடமைகளை இழந்தவர்களின் நினைவாக விசேட பூசைகளும்,கூட்டுப் பிராத்தனைகளும் நடைபெறும்.

★ இஸ்லாமிய அபிவிருத்தி வங்கியின் பொது மகாநாடு நாளை ஜித்தாவில் நடைபெறவுள்ளது. இம் மாநாட்டில் இலங்கையிலிருந்தும் சில பிரதிநிதிகள் பங்குபற்றவுள்ளனர்.

## "சிவபாதசுந்தரனார் உருவாக்கிய பரம்பரை சிறப்பான பணியாற்றுகிறது''

—பண்டிதை தங்கம்மா

(மாவிட்டபுரம்)

''நாவலர், சேர். பொன் இராமநாதன் போன்ற பெரியார்களுக்குப்பின் சமயப்பணி, ஆசிரியப் பணி, நூல்வெளியீடு போன்ற பல்வேறு பணிகள் தொடர்கின்றன. சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் உருவாக்கிய மாணவர் பரம்பரை இன்று ஆசிரியர்களாகவும், அதிப ளாகவுமிருந்து சிறப்பான பணிகளைச் செய்து வருகிறது''.

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் நடந்த சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனாரின் 'சைவ போதம்' நூல் வெளிட்டு விழாவில் தலைமைதாங்கிப் பேசுகையில் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி குறிப்பிட்டார்.

இந்துசாதன ஆசிரியர் திரு. நம. சிவப்பிரகாசம் நூலை வெளியிட்டு வைத்ததைத் யடுத்து செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேலும் பேசுகையில் கூறியதாவது:

''எம் இளம் சந்ததியினரிடம் சமயப்பற்று அருகி வருவதால்தான் இன்னல்கள் பெருகி வருகிறது. இந்த நூலின்மூலம் அவர்களிடையே ஒரு புரட்சியையே உருவாக்கலாம். சிறுசிறு கதைகள் மூலம் சமய, மொழிப்பற்று, இளம் சந்ததியினரின் மனதில் பதியச் செய்ய இந்நூல் ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளது.

இன்று எம்மக்களிடம் தமிழ் மொழிப்பற்று அருகி வருகிறது. தமிழ் மக்கள் அரைகுறையாக தமிழையும், அரைகுறை ஆங்கிலத்தையும் பேசிவ வதை காணக் கூடியதாக இருக்கிறது, இந்நிலை மாறி தமிழ்மொழிமீது பற்றுக்கொண்டு நம் நடைமுறையில் காட்டினால்தான் எதிர்கால சமுதாயம் மொழிப்பற்றுள்ள சமுதாயமாக உருவாக முடியும்.

சைவப் பெரியார் ஆறுமுக நாவலர் தந்த சைவ வினா விடையும், பெரியார் சு. சிவபாதசுந்தரம் தந்த சைவ போதத்தையும் நாம் நல்ல முறையில் இளம் சந்ததியினருக்கு புகட்டுவோமானால் நல்ல சமயப்பற்று, மொழிப் பற்றுள்ள சமுதாயத்தை உருவாக்கலாம்'' என்றார்.

அன்றுமாலை ஆடிப்பூரம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

### இன்று நல்லூர் 6ம் திருவிழா

## நல்லூர்க் கந்தன்

அறுமாமுகன் அழகார்ந்தபொற் தேர்மீதினில்
அமர்ந்தான்
குறமாதுடன் தெய்வானையும் குகனுருடன் இருந்தார்
மறையோதினர் மலர்தூவினர் ம·ழ்ந்தாடினர் அடியார்
இறையோன்திருப் புகழ்பாடினர் இதுவோர்அருங் காட்சி

பாற்காவடி செடிற்காவடி மயிற்காவடி பறவை
போற்காவடி எடுத்தாடியே வந்தார்அடி யார்கள்
வேற்றுங்கினர் கொடிதாங்கினர் வெண்சாமரை
அசைத்தார்
நாற்சாரிலும் அங்கம்புரள் கின்றார்பல பத்தர்

அல்லாதவர் பரமூன்றையும் அழித்தார்நுதல் விழியார்
புல்லாமகிழ் குமராஅறு மு+னேவடி வேலா
வல்லாளனாய் வருசூரனை வதைத்தாய்மயில் கொண்டாய்
நல்லூரினில் உறைவாய்குக நாதாஅருள் தாராய்.

மந்தாரமும் மதுமாக்களும் மலர்ச்சோலையும் மலியும்
நந்தாவள நல்லூரினில் நலமேயிருந் தருள்செய்
கந்தாசுரர் சிறைமீட்டருள் கடம்பாகதீர் வேலா
எந்தாயுன திருதாள்களும் எந்நாளுமென் துணையே.

பொய்யாகிய புலன்போம்வழி புகுவேன்மதி யில்லேன்
மெய்யாகிய ஞானத்தினை மேவும்வகை செய்வாய்
செய்யாகிய நின்சீரடி சேர்ந்தேனெனை ஆள்வாய்
ஐயாவுனக் கபயம்புகழ் இனிவேறெனக் கிலையே.

(புலவர்) வே. கனகசபாபதி

## ★ அமெரிக்க தேர்தல் பிரசாரம் சூடுபிடிக்கிறது

# வேட்பாளர்கள் வாக்குறுதிகளை வழங்க ஆரம்பித்துவிட்டனர்!

## வருமானவரி விதிப்புப்பற்றி றீகன், மொன்டேல் பிரசாரம்

கலிபோர்ணியா, ஆக. 6

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரம் சூடுபிடிக்க ஆரம்பிக்கின்றது. ஜனாதிபதி திரு. றொனால்ட் றீகன், அவரது எதிர்ப் போட்டியாளரான ஜனநாயகக் கட்சி வேட்பாளர் திரு. வோல்ட்டர் மொன்டேல் ஆகியோர் மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்க ஆரம்பித்துவிட்டனர்.

வட லாஸ் ஏஞ்சல்ஸ் நகரமொன்றில் திரு றீகன் தமது பிரசாரமொன்றில் எதிர்வரும் நவம்பரில் ஜனாதிபதியாகத் தாம் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டால் புதிய வருமான வரி எதுவும் விதிக்கப்படமாட்டாதென உறுதியளித்தார்.

திரு. வோல்ட்டர் மொன்டேல் அண்மையில் தமது பிரசாரமொன்றில், அமெரிக்க அரசு சில கடன்பளுக்களை நிவர்த்திசெய்ய சில வரிவிதிப்புக்களை மேற்கொள்ளவேண்டி வரும் என்று தெரிவித்திருந்தார் இவ்வரி விதிப்பு யார் தெரிவுசெய்யப்பட்டாலும் தவிர்க்கமுடியாதது என்றார்.

எனவே இதற்கும் பதிலளிக்கும்வகையிலேயே திரு. றீகன் மேற்கண்டவாறு கூறினார்.

''எப்போதும் புதிய வரிகளையே விதிப்பது சாத்தியப்படாதது'' என்றும் அவர் கூறினார்.

திரு. மொண்டேல், றீகனை நம்பமுடியாதென்றும், அவரது நிதியமைச்சு புதிய வரி விதிப்புக்கள் குறித்து இரகசியமாக இயங்குகிறதெனவும் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினால் அவர்கள் அமெரிக்கர்களைத் திக்குமுக்காடும்வகையில் வரி விதிப்பார்கள் என்றும் தெரிவித்தார்.

ஆனால் திரு. றீகன் தாம் புதிய வரிகள் எதனையும் விதிக்கப்போவதில்லையென்றும் யார் தெரிவு செய்யப்பட்டாலும் வரி விதிப்பு தவிர்க்க முடியாதது என்று மொன்டேல் கூறியது பற்றி அவர் தெளிவான விளக்கமளிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார். [கி]

### உற்சவம்

(சாவகச்சேரி)

அரியாலை பிரப்பங்குளம் அருள் மிகு ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய ஸ்ரீ மகாலட்சுமி அம்பாள் உற்சவம் இம்மாதம் பத்தாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகும்.

அன்று மாலை அபிஷேகம், தீப ஆராதனையும், சுமங்கலிப் பூசையும் மகாலட்சுமி அம்பாள் உள்வீதி எழுந்தருளலும் நடைபெறும்.

### ரிச்சார்ட்பேர்ட்டன் காலமானார்!

வியன்னா, ஆக. 6

பிரபல ஹொலிவூட் நடிகரான ரிச்சார்ட் பேர்ட்டன் நேற்று வியன்னா நகரில் காலமானார். இறக்கும் போது இவருக்கு வயது 58 ஆகும்.

சுமார்50ஹொலிவூட்திரைப் படங்களில் இவர் நடித்துள்ளார். இவற்றில் பெரும்பாலானவை இவருக்கு பெரும் புகழைத் தேடிக் கொடுத்தன.

பிரிட்டனில் பிறந்த ரிச்சார்ட் பேர்ட்டன் மூளைக் கொதிப்பு நாயினால் பாதிக்கப்பட்டிருந்தார் இவர் தமது காலங்களில் ஒருசிறந்த ஷேக்ஸ்பியர் நாடகக் கலைஞராகவும் திகழ்ந்தார்.

எலிஸெபத்ரெய்லர் உட்பட பல முன்னணி ஹொலிவூட் நட்சத்திரங்கள் இவரது மரணம் குறித்து அதிர்ச்சியும், வேதனையும் தெரிவித்துள்ளனர். (கி)

### இன்றைய பலன்

மாதம்-ஆடி
திகதி-23(07-08-1984)
வாரம்-செவ்வாய்
திதி-ஏகாதசி முன் இரவு 8-06 வரை
நக்ஷத்திரம்-கேட்டை பிற்பகல் 2-11 வரை

மேடம்:- துன்பத்தின் ரேகைகள் படரும் எதற்கெடுத்தாலும் சிறிவிழுவீர்கள் கொடுக்கல் வாங்கல் மூலம் ஏமாற்றம் அடைய நேரிடும் தொழில்துறையிலும் தொல்லைகள் தோன்றி மறையும்.

இடபம்:- செயற்திறமையால் மற்றவருடைய நன்மதிப்பைப் பெறுவீர்கள் கல்வித்துறையில் திருப்திகரமான முன்னேற்றம் உண்டு சிலருக்கு அதிர்ஸ்டலாபம் கிடைக்கலாம் சிறப்பானதினம்.

மிதுனம்:- குடும்பக்கவலை தலைதூக்கும் பிதாவழிப்பிணிக்கும் இடமுண்டு அந்நியர்கள் மூலம் தொல்லைகள் தோன்றி மறையும் பணவிவகாரத்தில் அபிப்பிராய பேதங்கள் தோன்றி மறையும்.

கடகம்:- வாகனசுகத்துடன் வாழ்க்கைநலன் வந்துசேரும் தாய்வழித்தனத்துடன் தன்மானப தலைதூக்கும்.

சிங்கம்:- இதயம் இன்பத்தால் துள்ளும் கவர்ச்சிகரமான பொருட்களில் அதிக ஆர்வம் பிறக்கும் சிலர் வாழ்க்கையில் பொதுசனத்தலைமைக்கும் இடமேற்படலாம்.

கன்னி:- பக்கத்தில் படுகுழி தோண்டுவதற்கு பகைவர்கள் காத்திருப்பர் முகமன் பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

துலாம்:- ஆயுதபீடைக்கும் இடமுண்டு அவதானம் வேண்டும் குடும்பத்தில் உறவுமுறைகள் மிகவும் சுகமாக இருக்கவும் புதிய சிந்தனைகள் உருவாகும் பொருள்கள் சேர்ப்பதிலும் இன்று அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

விருச்சிகம்:- செய்தொழிலில் தளர்ச்சி ஏற்படும் உடல் நலம் சிறிது பாதிக்கபடலாம் நண்பர் ஒருவர் உங்கள் காலை வாரிவிட முனையக்கூடும்.

தனுசு:- பெரியோரைப் பேணுவதன் மூலம் பெரிய காரியங்களைச் சாதித்துக்கொள்வீர்கள் கல்வித்துறையில் அதிக புகழ்கிடைக்கும் மகிழ்ச்சியான தினம்.

மகரம்:- தொழில்புரியுமிடத்தில் மேலிடத்து ஆதரவு கிடைக்கும் புதுத்துறைகளில் நாட்டம் பிறக்கும் பதவிஉயர்வுடன் சிலருக்கு இடமாற்றமும் கிடைப்பதற்கு இடமுண்டு.

கும்பம்:- புதிய நண்பர்கள் உங்களை உற்சாகமாக வரவேற்பார்கள் பொருள் வரவிற்கும் இடமுண்டு சிறப்பான நாள்.

மீனம்:- பலவித சிந்தனைகளினால் தாக்கப்படுவீர்கள் உடல்நலனும் பாதிக்கப்படலாம் திரைமறைவில் மோசடி நடக்கும் நம்பிக்கையின்மூலம் பணம்விரயமாகும்.

**திருமலை**
**வே. ரவீந்திரன்**

### நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயண கிராம அபிவிருத்தி சங்கம் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.:-

போஷகர்:- ப.சின்னத்துரை தலைவர்:- சி.தேவராசா, உப தலைவர்:- நா.கிருஷ்ணபிள்ளை, செயலாளர்:-ஐ.கேசவநாதன், உப செயலாளர்:- ந.அரியரத்தினம், பொருளாளர்:-த.குணநாதன், சிரமதானத்தலைவர்:- க.நடராசா, கணக்காய்வாளர்:-நா. தவராசா, விளையாட்டுக்குழு செயலாளர்கள்:- சி.வாமதேவன், சி.லிங்கநாதன்.

7 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

இக் கிராம அபிவித்திக் சங்கமும், சனசமூக நிலையமும், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகமும் இணைந்து தாச்சி சுற்றுப் போட்டியொன்றை நடத்தவுள்ளன.


## யந்திர வகைகள் குத்தகைக்கு வேண்டுமா?

இரும்பு கடைச்சல் யந்திரம் — மர கடைச்சல் யந்திரம் (LATHE), அச்சுயந்திரம் — புதிய போக்குவரத்து வாகனங்கள் — சலவைச் சாதனங்கள் — வைத்திய சாதனங்கள் — மேலும் கைத்தொழிலுக்குத் தேவையான சாதனங்கள்.

★ சொத்துக்களை நிரந்தரமாக்கிக்கொள்ள குத்தகை உன்னத வழி. அத்துடன் உங்கள் தொழிலை விருத்தியடையச் செய்ய உங்கள் நடைமுறை மூலதனம் உதவுகிறது.

★ 100% வருமான வரிச்சலுகையை உறுதிப் படுத்துவது குத்தகையே!

★ குத்தகை — உங்கள் வருமானத்தை விருத்தியடையச்செய்யும். இதனால் உங்களுக்குத் தேவையில்லாத பழைய யந்திரங்களை தவிர்த்துக்கொள்ளலாம்.

TFC

த பினன்ஸ் கொம்பனி லிமிட்.,
249, மின்சார வீதி,
யாழ்ப்பாணம்.
டெலிபோன்: 23680


### வட்டக்கச்சியில்

## 27 மாணவர்களுக்கு குறுகிய கால விவசாயப் பயிற்சி!

(கிளிநொச்சி)

வட்டக்கச்சியில்உள்ள அரசினர் விவசாயப் பாடசாலையில் குறுகியகால விவசாயப் பயிற்சியை பெறும் முகமாக 27 மாணவிகள் தெரிவாகிஉள்ளனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து தெரிவாகிஉள்ள இம்மாணவிகளுக்கு மிருகபரிபாலனம் வீட்டுத்தோட்டம்ஆகிய துறைகளில் ஒரு மாதகால பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சிகளுக்கு பொறுப்பாக விவசாய பாடசாலை முகாமையாளர் திரு. மரிய

(5ம் பக்கம் பார்க்க)

## ★ ஒலிம்பிக்



### நடைப் போட்டியில் தங்கப் பதக்கம்

ஒலிம்பிக் மெய்வல்லுநர்ப் பந்தயங்களில் முதலாவதாக ஆரம்பமான நடைப் போட்டியில் மெக்ஸிக்கோவைச் சேர்ந்த ஏர்நெஸ்டோ கன்ரோ என்பவர் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

இவர் 20 கிலோ மீட்டர் தூரத்தை ஒரு மணித்தியாலம் 23 நிமிடம் 13 செக்கன்களில் நிறைவு செய்தார். இப்போட்டியில் இரண்டாமிடத்தை ஆர்ஜன்டீனா வீரரொருவரும், மூன்றாமிடத்தை இத்தாலிய வீரரொருவரும் பெற்றனர்.

### அரை இறுதிக்குத் தெரிவு

இந்தியாவின் 400 மீட்டர்கள் தடை தாண்டி ஓட்ட வீராங்கனையான பி. ரி. உஷா என்பவர் இப்பந்தயத்தின் அரை இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார். நேற்று இடம் பெற்ற பூர்வாங்கப் போட்டியொன்றில் இவர் தமது ஓட்டத்தை 56 81 செக்கன்களில் நிறைவு செய்துஇரண்டாமிடத்தைப்பெற்றார். அமெரிக்கப்பெண்ணொருவர் 55.97 செக்கன்களில் முதலாமிடம் பெற்றார். இப் போட்டியில் கலந்து கொண்ட எம். பி. வலசம்மா என்ற வேறொரு இந்தியப் பெண் ஐந்தாவது இடத்தையே பெற்றார். இதனால் இவர் அரை இறுதிக்குத் தெரிவாகவில்லை. வலசம்மா 'ஆசியாட்' போட்டியில் இப்பந்தயத்தில் தங்கப் பதக்கம் பெற்றவரென்பது குறிப்பிடத்தக்கது.

### பதக்கப் பட்டியல்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 40 | 28 | 8 |
| சீனா | 12 | 6 | 5 |
| ரூமேனியா | 10 | 7 | 4 |
| இத்தாலி | 7 | 1 | 5 |
| மே. ஜேர்மனி | 6 | 9 | 11 |
| ஜப்பான் | 6 | 4 | 8 |
| கனடா | 5 | 8 | 5 |
| ஆஸ்திரேலியா | 3 | 6 | 9 |
| நெதர்லாந்து | 2 | 2 | 4 |
| பிரிட்டன் | 1 | 2 | 10 |
| பிரான்ஸ் | 1 | 2 | 4 |
| மெக்ஸிக்கோ | 1 | 2 | 1 |
| பின்லாந்து | 1 | 1 | 2 |
| தென் கொரியா | 1 | 1 | 1 |
| பெல்ஜியம் | 1 | 0 | 2 |
| யூகோஸ்லாவியா | 1 | 0 | 2 |
| நியூஸிலாந்து | 1 | 0 | 1 |
| சுவீடன் | 0 | 5 | 4 |
| சுவிற்சலாந்து | 0 | 1 | 2 |
| டென்மார்க் | 0 | 1 | 1 |
| கிரேக்கம் | 0 | 1 | 1 |
| ஆஸ்திரியா | 0 | 1 | 0 |
| பிரேஸில் | 0 | 1 | 0 |
| கொலம்பியா | 0 | 1 | 0 |
| பேரு | 0 | 1 | 0 |
| நோர்வே | 0 | 0 | 1 |
| தாய்வான் | 0 | 0 | 1 |
| வெனசுவெலா | 0 | 0 | 1 |

(கி)

செய்திகள் ★

# தமிழ்ப் பணிபுரிந்த தகைமைசேர் அறிஞர்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிபல்வேறுதுறைகளிலும் தனது பணியை ஆற்றிவருகின்றது. கல்வி, அரசியல், விளையாட்டுத்துறை, இலக்கியத்துறை அனைத்திலும் கல்லூரி முன்னணியாளர்களை உருவாக்கியிருக்கிறது. கல்லூரியின் நிறுவகரும் முதல் அதிபருமான பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை ஈழத்தின் நவீன தமிழ்க் கவிதையின் முன்னோடி என்று ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றுஆசிரியர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். நாடகத் துறைக்கும் அவர் தமதுபங்களிப்பை ஆற்றியுள்ளார். அவர்களுக்குப்பின் கல்லூரிஅதிபராகப் பணியாற்றிய கவிஞன் கா. சின்னப்பாபிள்ளை தமிழகமும் போற்றிய கவிஞராவார்.

இவர்களுக்குப்பின் அவர்களது பாரம்பரியத்தை நிலைநிறுத்த திரு. த. சண்முகசுந்தரம் அவர்கள் அண்மையில் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். இளமையிலேயே இலக்கியப் பணியில் ஆர்வம்கொண்ட திரு. சண்முகசுந்தரம் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயிலும்போது 'இளங்கதிர்' ஏட்டின் முதல் ஆசிரியராகத் திகழ்ந்தவர். 'தினகரன்' இதழில் சிறிதுகாலம் பணியாற்றியபின் அவர்கள் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் சிற்பி எனப்போற்றப் படும் திரு. தெ. து. ஜயரத்தினம் அவர்களால் அழைக்கப்பட்டார்.

பேராசிரியர்களான க. கணபதிப்பிள்ளை, சு. வித்தியானந்தன் ஆகியோருடைய வழிகாட்டலிலே அவர் பல்துறை அறிஞராக உருவானார். சிறுகதை, நாவல், நாடகம், நாட்டாரியல், வரலாறு, சமயம்முதலிய பலதுறைகளிலும்அவர்ஆர்வத்தோடு உழைத்தார். வித்து-

மயிலங்கூடலூர்

**பி. நடராசன்**

வான் நா. சிவபாதசுந்தரனார் கவிஞர் செ. கதிரேசபிள்ளை ஆகியோருடன் இணைந்தும், தனித்தும் மகாஜனக் கல்லூரி மாணவர்களிடம் இலக்கிய கலை, ஆர்வங்களை வளர்த்துவிடும் பணியில் திரு. சண்முகசுந்தரம் ஈடுபட்டு வந்தார். கல்லூரியில் வெளியிடப்பட்ட 'மகாஜனன்' ஏட்டின் ஆசிரியராகவும் அவர்கள் சிறப்புடன் பணியாற்றினார்கள். மாணவர்களிடையே சிறுகதைப் போட்டியை நடத்திச் சிறந்த கதைகளுக்கு ஆண்டுதோறும் பரிசு வழங்க ஏற்பாடு செய்ததோடு அக்கதைகளைத் தொகுத்து 'இளம் முல்லை' என்ற சிறுகதைத் தொகுப்பு வெளிவரவும் உதவினார். கல்லூரி மாணவர் சிலர் ஒன்றிணைந்து 'சங்கமம்' என்ற இலக்கிய ஏடு வெளிவரவும் தூண்டுதலாக இருந்தார். கல்லூரியின் மரபுகளைப் பேணும் ஒருவராக ஏறத்தாழ கால்நூற்றாண்டு அவர்கள் கல்லூரியில் பணியாற்றினார்கள்.

மாணவர்களுக்கு முன்னோடியாகும்வகையிலே படைப்பிலக்கியத்துறையில் தாமும் ஈடுபட்டார். பல சிறந்த சிறுகதைகளை எழுதினார். 'ஆசை ஏணி' என்ற நாவல் மூலம் புகழ்பெற்றார். இது சுதந்திரனில் வெளியானது. மீண்டும் சிஎன்றநாவல்நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளது. மாருதப்புரவீரவல்லியின் வரலாற்றை 'வாழ்வு பெற்ற வல்லி' என்ற பெயரில் நாடகமாக எழுதினார். 'பூதத்தம்பி', 'இறுதி மூச்சு' ஆகிய நாடகங்களையும் வெளியிட்டுள்ளார். கலையுலகு தொடர்பாக 'கலையும் மரபும்', இசையும் மரபும்', 'யாழ்ப்பாணத்து இசை வேளார்' ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். மக்கள் கலைத்துறையில் இவரது எட்டு நூல்கள் வெளிவந்துள்ளன. இந்து சமய மரபுகள் தொடர்பாக 'யாழ்ப்பாணத்து வீரசைவர்', 'ஈழத்துச் சித்தர் சிந்தனை விருந்து' ஆகிய நூல்களும் இவரால் எழுதப்பட்டன. பல்கலைக்கழகத்தில் தமது குருநாதர்களாக விளங்கி வழிகாட்டிய பேராசிரியர்களிருவருடைய வாழ்வும் பணியும் 'கலையருவி கணபதிப்பிள்ளை', 'கலைமகிழ்நன்' ஆகிய இருநூல்களை வெளியிட்டுள்ளார் பாவலர் துரையப்பாபிள்ளையின் வரலாற்றைக்கூறும் 'அறிவு கொளுத்திய அமரர்' என்ற நாடகம் 1972இல் பாவலர் நூற்றாண்டு விழாவின்போது மேடையேற்றப்பட்டது 'மலையருவி மகாலிங்கசிவம்' முதலிய பல நூல்கள்- பல்துறை நூல்கள்- அச்சுவாகனம் ஏறும் நாளை எதிர்பார்த்துக் கிடக்கின்றன. 'வாழ்வு பெற்ற வல்லி', 'கலையருவி' கணபதிப்பிள்ளை ஆகிய நூல்கள் சாகித்தியமண்டலப் பரிசு பெற்றன.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆசிரியராகப் பணியாற்றிய அவர்கள் ஆகஸ்ட் முதலாம் திகதி அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறார்கள். அண்மையில் அவர்கள் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், கல்லூரி அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் இணைப்புக் கூட்டத்தை நடத்தி, கல்லூரியில் எதிர்காலத்தில் நிகழ்த்தப்பட வேண்டிய பணிகளை விளக்கி, அப்பணிகளைத் தொடர எதிர்காலத்தில் பதவியேற்கும் அதிபருக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். கடந்த காலங்களில், 1970க்குப் பின் சராசரியாக ஆண்டுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் கல்லூரியில் அதிபர் மாற்றம் இடம் பெற்றது. இந்நிலையில் ஒத்துழைத்தவர்களைக் கூட்டி நன்றி கூறும் வாய்ப்புக் கல்லூரி அதிபர்களுக்குக் கிடைக்கவில்லை. இவ்வகையில் ஓய்வு பெறும் அதிபர் திரு. சண்முகசுந்தரம் அவர்கள் செயல் புரட்சிகரமானதாக அமைந்தது.


**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி
**என் தம்பி**

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
BAD BLOOD
Action-Adults Only
திகில் ஊட்டும் மர்மச் சித்திரம்

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவகுமார் - ஜெய்சித்திரா
விஜயகுமார்
**பொண்ணுக்கு தங்கமனசு**

**வின்சர்** (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-30, 6-30
எம். ஜி. ஆர். - சாவித்திரி
வீரப்பா - சந்திரபாபு
**மகாதேவி**
(புத்தம் புதிய பிரதி)

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
சிவாஜி - பத்மினி
ரதவிகா
**சரஸ்வதி சபதம்**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, —2-30,
4-30 — 7-00
**Eye For An Eye**

**றீகல்** (யாழ். நகர்)
10-30, 2-15, 4-30, 6-30
Terrence Hill ...
Bud Spencer ... in
"WHO FINDS A FRIEND FINDS A TREASURE"
[Latest Action - Comedy]

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
சிவாஜி, கிரிஜா,
கண்ணாம்பா நடித்த
**மனோகரா**
(புதிய பிரதி)
(இதுவே கடைசித் தடவையாக யாழ். நகரில் காண்பிக்கப்படுகிறது)

**லிடோ** யாழ். நகர்
Daily
10-30, 2-30, 4-45, 7-15
THE BURNING
(Strictly for Adults)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ரஞ்சன் - டி. ஆர். ராஜகுமாரி
**சந்திரலேகா**
[புதிய பிரதி]
அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க பல வருடங்களுக்குப் பின் திரையிடப்படுகிறது.


## சென்னை விமானநிலைய குண்டுவெடிப்புச் சம்பவம்:

# 15 சிங்களவர், 5 தமிழர்கள் பலியாகியுள்ளனர் !

### பிரதமர் 'பிரேமா' தகவல்

(கொழும்பு)

''சென்னை மீனம் பாக்கம் விமான நிலையத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 15 சிங்களவரும், 5 தமிழர்களும் பலியாகியுள்ளனர்.''

இவ்வாறு பிரதம மந்திரி திரு ஆர். பிரேமதாசா வெலிகம தொகுதியில் இடம்பெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையில் கூறினார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''இலங்கை பயங்காவாதிகள் தமிழ் நாட்டிலிருந்து கொண்டு எமக்குத் தொல்லை கொடுத்து வருகிறார்கள் என பல தடவை சொல்லி வந்தேன். ஆனால் இந்தியா எமது குற்றச் சாட்டை தட்டிக் கழித்து வந்தது.''

''இலங்கையிலிருந்தே குண்டுப் பார்சல்கள் அனுப்பப் பட்டதாக தற்போது அங்கு கதை கட்டவிழ்த்து விடப்படுகிறது. பொய் வதந்திகளை கட்டவிழ்த்து மக்களை சிலர் குழப்பப் பார்க்கிறார்கள். பொய் வதந்திகளினால் மக்கள் குழப்பம் அடையாமல் இருப்பதற்காகவே இந்த விபரங்களைக் கூறுகிறேன், எனவே மக்கள் குழப்பம் அடையாது விழிப்புடன் இருக்க வேண்டும்'' என்றார்

## வானொலி

மாலை

5-30 'மைட்டிமௌஸ்' (ஆங்கிலம்)
6-00 சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)
6-30 'கோமாளிகள்' உள்ளூர்த் திரைப்படம் (தமிழ்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 சிங்கள நிகழ்ச்சி
7-45 'கோட்ரெட்' (ஆங்கிலம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 'கோட்ரெட்' தொடர்ச்சி
9-00 'டிபரன்ற் ஸ்ரோக்ஸ்' (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 'பிக்வலி' (ஆங்கிலம்)
10-30 உலகச் செய்திகள்
10-35 'பிக்வலி' தொடர்ச்சி
10-50 நிகழ்ச்சிகள் முடிவு

## மகாகவியும் கீதாஞ்சலியும்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கள் உதிரம் சிந்தியும், நோய் வாய்ப்பட்டும், பசிப் பிணிக்கிரையாகி மாண்டும், கொடிய ராணுவ ஆட்சியால் மக்கள் வருந்திய இருள் சூழ்ந்தகாலத்தில் ''தமிழில் கீதாஞ்சலியைப் படித்து மனஆறுதல் அடைந்துள்ளேன்'' என்று தம்முடைய 'தமிழ்க் கீதாஞ்சலி' என்னும் நூலில் குறிப்பிட்டிருக்கிறார் அமரர் மு. கு சு. படித்த ஞான்று தமிழ் மறைகளும் தாகூர் கருத்தும் ஒத்திருப்பதைக் கண்டு அவரின் தமிழ்ப் பற்று வலுவடைந்தமை இந் நூலில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அமரர் மு. கு. சுப்பிரமணியத்தின் மொழிபெயர்ப்பில் சில பகுதிகளை இங்கு தருகின்றோம்.

''மந்திர உச்சாடனத்தையும், பாடலையும், செபமாலை உருட்டுவதையும் விட்டுவிலகு. கதவுகளை மூடிக்கொண்டு ஆலயத்தின் இருள்சூழ் மூலையில் யாரை வணங்குகின்றாய்? கண்களைத் திறந்து பார் உன் கடவுள் உன் முன் இல்லை! இறைவன் எங்குளன்? பாழ் நிலத்தைப் பண்படுத்தும் பக்கலில், கருங்கல் உடைத்துப் புதுவழி திறக்கும் தொழிலாளியின் அருகில், அவன் அவர்களோடு கடுவெயிலிலும், பெருமழையிலும் இருக்கிறான். அவனது ஆடை அழுக்கடைந்துபோயிற்று. உனது புனிதப் போர்வையைக் கழற்றி எறிந்துவிடு. ஐயனைப்போல் நீயும் உழைப் போர்க்கருகிற் செல். புழுதி படிந்த நிலத்துக்குப் போ. விடுதலை; விடுதலை!''

''உனது தியானங்களை விட்டு வெளியேவா, பூக்களையும், தூபங்களையும்அப்பால்அகற்று. உனது உடைகள் மாசடைந்து கிழிந்துபோனால் என்ன? வேலை செய்வோர் அண்டையிற்செல். அவனது உடல் உழைப்பிலும் அவனது நெற்றி வியர்வையிலும் நீ பங்கெடு. சீவத்தொண்டு சிவத்தொண்டு,,

''எங்கேமனம்பயமற்றதோ, தலை உயர்த்திநிற்பதோ, எங்கே அறிவு சுவாதீனமுடையதோ, எங்கே குறுகிய சுய அபிமான வரம்பால் உலகம் பலகூறாகப் பிரிக்கப்படாமல் இருக்கிறதோ'',

''எங்கே உண்மையின் ஆழியிலிருந்து பேச்சு வசனிக்கப் படுகிறதோ, எங்கே பூரண நிலைக்காய இளையாத போராட்டத்தின் கை நீட்டப்படுகிறதோ,

எங்கே சீவனற்ற பழக்கமென்னும் பாழ்வனத்தில் அறிவென்னும் தெளிந்த ஆறு ஓடி மறையவில்லையோ,

எங்கே மனம் பரந்த நினைவிலும் செய்கையிலும் உம்மால் நடத்தப்படுகிறதோ;

அங்கே அச்சுவாதீன சுவர்க்கத்துள், எந்தாய்! என்தேசம் விழிக்கச் செய்யும்.

## 27 மாணவர்கள்...

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

நாயகம் இருந்துவருகிறார் பயிற்சியை மேற்கொள்ளும் மாணவிகளுக்கு நாளொன்றிற்கு ஐந்துரூபா ஊக்குவிப்பு பணமாக வழங்கப்படுகிறது.

இதற்கு முன்னர் 6 மாதகால விவசாய பயிற்சி வகுப்பொன்று இப்பாடசாலையில் நடாத்தப்பட்டது. பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறியோருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம்ஒன்றும் பொருட்காட்சியும், கருத்தரங்கும், விவசாய அறிவுப்போட்டியும் பிரஸ்தாப பாடசாலையில் பயிற்சிக்கலாசாலை முகாமையாளர் திரு. மரியநாயகம் தலைமையில் நடைபெற்றது.

பிரதமவிருந்தினர்களாக அரசாங்க அதிபர் என். ஜெயநாதன், பிரதி மாவட்ட விவசாயப்பணிப்பாளர் எஸ். பத்மநாதன் ஆகியோர் கலந்து விவசாய அபிவிருத்திக்கு இப் பாடசாலை ஆற்றும் சேவைகள் குறித்து உரையாற்றினார்கள்.

## நியமனக் கடிதங்கள்

(கல்வியங்காடு)

அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் தெரிவு நேர்முகப் பரீட்சையில் தெரிவாகியுள்ளவர்களுக்கு ஆசிரியர் நியமனக் கடிதங்கள் வழங்கப்படுகின்றன.

யாழ். கல்வி மாவட்டத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் கற்பிக்க தெரிவாகியுள்ளவர்களுக்கு நியமனக் கடிதங்கள் யாழ். கல்வித் திணைக்களத்தில் தற்சமயம் வழங்கப்படுகின்றது.

நியமிக்கப்படுகிறவர்கள் ஆசிரியர் சேவை முன்பயிற்சியை இம்மாதம் 5-ந் திகதி முதல் மூன்று வாரங்களுக்கு பெற்ற பின்னரே பாடசாலைகளுக்கு அனுப்பப்படுவர்.

'சேவை முன் பயிற்சியில் பங்கு கொள்ளும் விதிமுறைகளும் நியமனம் பெறுபவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## இன்று

(சாவகச்சேரி)

தனங்கிளப்பு ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய ஆண்டுவிழா இன்று மாலை நிலையத்தலைவர் ச. சண்முகம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு க. துரைராஜா கலந்து கொள்வதுடன் அறவழிப் போராட்டக்குழுத் தலைவர் திரு. வி. எஸ் துரைராஜா சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

திரு. ச. சி அமிர்தலிங்கம்' திரு. அருணசலம், திரு எஸ். சின்னப்பா ஆகியோரும் உரை நிகழ்த்துவார்கள் விழா இறுதி அம்சமாக கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## யாழ். நகரில் நேற்றும்

# சன நடமாட்டம் குறைவு; கடைகள் திறக்கவில்லை!

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் நேற்றுமுன் தினம் நடந்த குண்டுவெடிப்பு, துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைத் தொடர்ந்து நேற்று சன நடமாட்டம் குறைவாகவே காணப்பட்டது.

பெரும்பாலான கடைகள் திறக்கப்படவில்லை. நவீன மார்க்கட்டில் ஒருசில கடைகள் மட்டுமே திறந்திருந்தன.

வ. பி. போ. ச. பஸ்கள் வழக்கம்போல் சேவையில் ஈடுபட்டபோதிலும் பிரயாணிகள் குறைவாகவே காணப்பட்டனர். மினிபஸ் சேவைகள் குறைவாகவே இருந்தன.

அரசாங்க காரியாலயங்கள், தனியார்நிறுவனங்கள் வழமை போல் நடைபெற்றது, காலையில் திறந்திருந்த சில கடைகளும் நேற்று நண்பகலுக்குப் பின்னர் மூடப்பட்டன. பஸ் சேவைகளும் படிப்படியாகக் குறைந்துவந்தன. வீதிகளில் வாகனப்போக்குவரத்தும், சனநடமாட்டமும் குறைந்தது. தியேட்டர்களில் இரவுக் காட்சிகள் நடைபெறவில்லை.

நேற்றுக்காலை பொதுமக்கள் கூட்டம் கூட்டமாக நின்று துப்பாக்கிக் குண்டுகள் துளைத்த கடைகளையும், சுவர்களையும் பார்வையிட்டனர்.

நவீன சந்தையின் 'கன்கிறீற்' சுவரில் குண்டுபாய்ந்து ஊடுருவி உள்ளே சென்றிருந்ததையும் இரும்பு மடிப்புக் கதவில் ஐந்தாறு இடங்களில் குண்டு ஊடுருவிசென்றதையும் மக்கள் பார்த்துக்கொண்டிருந்தனர் வீதியோரத்தில் அங்குமிங்குமாகச் சிதறிக்கிடந்த வெற்றுக் குண்டுகளையும் பார்வையிட்டனர்.

தூர இடங்களுக்கான தனியார் பஸ்சேவை எதுவும் நேற்றுக்காலை நடைபெறவில்லை. யாழ். நகரிலுள்ள ரியூட்டறிகளில் நேற்று மாணவ மாணவிகள் குறைவாகக் காணப்பட்டன. (க)

## மீனம்பாக்கம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மீனம்பாக்கம் குண்டு வெடிப்புடன் சம்பந்தப்பட்டவராக அந்நபர் இருப்பாரோ என்று சந்தேகிக்கப்படுகின்றது.

இதேவேளை மீனம்பாக்கம் சம்பவம் குறித்து இந்திய சிவில் விமானச் சேவை இயக்குநனர் நாயகம் மற்றும் தமிழக பொலிஸ் திணைக்கள உயர் மட்டமும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அநாமதேயத் தொலைபேசி அழைப்புக்கள் கிடைத்த மறுகணமே மீனம்பாக்கம் அதிகாரிகள் உடன் செயலில் இறங்காதது குறித்தே விரிவாக ஆராயப்படவிருக்கிறது.

## மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள்

(மட்டக்களப்பு)

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் பலியான இருபத்து நான்கு இலங்கைப் பிரஜைகளில் இருவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கல்லடி முகத்துவாரத்தைச் சேர்ந்த திருமதி நாகேஸ்வரி, மட்டக்களப்பு கூழாவடி குடியேற்றத்திட்டத்தைச் சேர்ந்த திருமதி மார்க்கிரட் ஆகிய இருவருமே பெயர்ப்பட்டியலிலிருந்து தெரியவந்தவர்களாவர்.

மேற்படி இரு பெண்களும் பேருட்டில் வேலை பெற்று அங்கு செல்லும்வழியில் சென்னையில் தரித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. இருவருக்கும் நான்கு குழந்தைகள் உண்டு.

## தத்தம் வீடு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையதாக்குதல் சம்பவத்தில் 10 பயங்கரவாதிகளும் வல்வெட்டித்துறை சம்பவத்தில்12 பயங்கரவாதிகளும் கொல்லப்பட்டதாகவும் ராஜாங்க அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது

## துப்பாக்கி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகக் கூறப்படுகிறது.

சிறுவனின் சடலம் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டு, பிரேதசாலையில் வைக்கப்பட்டது. யாழ். நீதவான் எஸ். நாகராசா நேற்று மரணவிசாரணை நடத்தினர். பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்தி வைத்தார். [க]

## இலங்கை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேசிய சிவில் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. குர்ஷ் லாம்கான் இதனைத்தெரிவித்தார்.

29 பேரை பலிகொண்ட இந்த குண்டு வெடிப்பு சம்பவம் குறித்து உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### சங்கரன் மனோகரன்

யாழ்ப்பாணம் விக்டோறியா வீதியைச் சேர்ந்த திரு. திருமதி சங்கரன் (சுபாஸ் ஹோட்டல் உரிமையாளர்) அவர்களின் அன்பு மகன் மனோகரன் (மணி) (பட்டயக் கணக்காளர்) 5-8-84 ஞாயிற்றுக்கிழமை காலமானார் அன்னாரது ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். 1254

## மரண அறிவித்தல்

### திரு. க. குமாரசுவாமி

நல்லூர் செட்டித்தெரு இளைப்பாறிய மலாயன் பென்சனர் திரு. கந்தையா அவர்களினதும், காலஞ்சென்ற திருமதி கனகம்மா கந்தையா அவர்களினதும் மூத்த மகன் குமாரசுவாமி (இளைப்பாறிய விமானப்படைஉத்தியோகத்தர்) காலமாகிவிட்டார். இவர் தர்மாம்பிகையின் அன்புக்கணவரும், ஜெயக்குமார். மாலதி, மாலினி, தர்மகுமார் ஆகியோரின் அன்புத்தந்தையும், சுந்தரலிங்கம், சவுந்தரிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகபூசணிதேவி, சண்முகநாதன் ஆகியோரின் மைத்துணருமாவர். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 13, செட்டித்தெரு நல்லூர், இல்லத்திலிருந்து 84-08-07ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 2-00 மணிக்கு. செம்மணிமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். தகவல் தருபவர்:- கந்தையா.

1255

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் தருமலிங்கம்

காலஞ்சென்ற நாகமுத்து தருமலிங்கத்தின் அன்பு மனைவியும், பாலசிங்கம் (ஓமான்) வைத்தியக் கலாநிதி மகாதேவன் [U.K.], பரமேஸ்வரி நாகரட்னம் (இஸப்பத்தானு மத்திய மகாவித்தியாலயம், கொழும்பு), தேவராஜன் (Attorney. U. S. A.) தர்மவதி வேம்படி மகளிர் கல்லூரி), வாமதேவன் (தேசிய வீடமைப்புத் திணைக்களம்), பஞ்சலிங்கம் [B.M.C.], சபாதேவன் (கணக்காளர்) பேராசிரியர் ராமதாஸ் [மருத்துவபீடம், யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்புத் தாயாரும், அருந்ததி ஐரின், காலஞ்சென்ற நாகரட்னம், வைத்தியக்கலாநிதி யோகேஸ்வரி (U.S.A.) பாலசுப்பிரமணியம் (சட்டத்தரணி) சரஸ்வதி, சிவராஜினி, வைத்தியக்கலாநிதி ஞானம்பிகை (மருத்துவபீடம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜயந்தி, தமயந்தி, அர்ஜுன், கீதா, தருக்கா, தேவயானி, கணேஷ், தர்ஷன், நிலானி (Indian Airlines), நந்தகுமார், வத்தஸலா, சிவலலிதா, சத்தியராம், வசந்தி, கஜன், லவன், யசோதரா. ரவிராம் ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆகிய சிவபாக்கியம் அவர்கள் காலஞ்சென்றுவிட்டார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 52. வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் இல்லத்திலிருந்து இன்று 7-8-84 செவ்வாக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். தகவல்: இ. சுப்பிரமணியம். சட்டத்தரணி. 1233

## இப்படியும் நடக்கிறது

**யாழ்.** மாவட்டத்தில் இத்தனை துயரச் சம்பவங்கள் தொடர்ச்சியாக நிகழ்ந்துகொண்டிருக்கும் ஒரு இக்கட்டான நேரத்தில் கூட, யாழ். மத்தியகல்லூரி மாணவன் தினேஷ் பற்றிய 'ஈழநாடு' உதவிச்செய்தி கூறித்து பல குரல்கள் தொடர்ந்து ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

யாழ். சுண்டுக்குளி விதானையார் வீதியைச் சேர்ந்த கிறிஸ்ரி செல்வகுமார் (17 வயது) எனும் இளைஞர், எமக்கு நேற்று அனுப்பிவைத்த கடிதம் இது:

''3-8-84 அன்று உங்கள் பத்திரிகையில், யாழ். மாணவன் தினேஷின் உயிரைக் காப்பாற்றயாரும் சிறுநீரகம் உதவுவார்களா என்ற செய்தி பார்த்து மெய்சிலிர்த்தேன். தினேஷின் உயிரைக்காப்பாற்ற பதினேழு வயது நிரம்பிய நான்; எனது சிறுநீரசத்தை அன்பளிப்புச் செய்யத் தயாராகஇருக்கின்றேன்.....''

உயர்ந்த கோபுரங்கள் என்று சொல்வது இதைத் தானா?

'ஊடுருவி'

## கன்னாதிட்டி வீதியில் இப்படியும் கொள்ளை!

[யாழ்ப்பாணம்]

தீவிரவாத இயக்கத்தினர் என்று அறிமுகம்செய்து கொண்ட இருவர், நகைவேலை செய்யும் கடையொன்றினுள் புகுந்து பத்து பவுண் எடையுள்ள தங்கப்பவுண் எடையுள்ள தங்கப்பவுண் கட்டிகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனராம்.

இச் சம்பவம் கன்னாதிட்டி வீதியிலுள்ள நகைவேலை கடையொன்றினுள் அன்றிரவு சுமார் ஏழுமணியளவில் மேற்படி கடையினுள் துப்பாக்கி சகிதம் புகுந்தஇரு இளைஞர்கள், தீவிரவாத இயக்கங்களுக்கு எதிரான பொருட்கள் அங்கு இருப்பதாகக்கூறி ''உங்கள் கடையை சோதனை செய்யப்போகின்றோம்'' என்று குறிப்பிட்டு கடையில் உள்ள மேசைகளை சோதனையிட்டனர் என்றும் அங்கிருந்து பத்துப் பவுண் நிறையுள்ள நகைகளைக் கொள்ளையடித்துக் கொண்டு சென்று விட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தாங்கள் வெளியே செல்லும் வரை சத்தம் போடவேண்டாம் என்றும் குறிப்பிட்ட இந்த நபர்கள் 50,000 ரூபா பணம் தந்தால் மேற்படி நகைகளை மீட்கலாம் என்றும் கூறிச் சென்றனராம்.

இது தொடர்பாக திரு. மாசிலாமணி சிவகுரு என்பவர் பொலிசில் புகார் செய்துள்ளார்.

## ஒட்டுசுட்டான்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வவனியா சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சோமசுந்தரம் நிரஞ்சன், இறந்தவர்களின் பிரேத பரிசோதனையை நடத்தினர்.

வவனியா மாஜிஸ்ட்ரேட் திரு வத்தேகெதர ஸ்தலத்தில் விசாரணைகளை நடத்தினர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற சம்பவத்தின் பின்னர் வவனியா வழிகள் யாவும் தடைசெய்யப்பட்டுள்ளன. தாக்குதலை மேற்கொண்டவர்கள் சீருடைகள் அணிந்து பஸ்ஸில் வந்ததாகக் கூறப்படுகின்றது.

## விமான விபத்து 49 பேர் பலி

டாக்கா ஆக. 6, பங்களாதேஷில் டாக்கா விமான நிலையத்தில் இடம்பெற்ற விமான விபத்தொன்றில் 49 பேர் பலியானார்கள். இவர்களில் 45 பயணிகளும், 4 பேர் விமானச் சிப்பந்திகளுமாவர்.

ஹெலிகாப்டர்களும், கடற்படையினரும் சடலங்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளன, [வெ]

## சடலங்கள் தகனம்!

(சென்னை)

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் பலியான 24 இலங்கையர்களின் சடலங்கள் நேற்றுமாலை ஒன்றாக தகனம் செய்யப்பட்டன.

இலங்கையிலிருந்து இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்வதற்காக 174பேர் விசேட விமானத்தில் வந்திருந்தனர். இறுதிச் சடங்குகளின்போது வேறு எவரும் மயானத்தினுள் அனுமதிக்கப்படவில்லை.

## மகஜர் கையளிப்பு

(அரியாலை)

திட்டி இராசசிங்கம் வீதியில்லிருக்கும் டாக்டர் எலிசன் இராசசிங்கத்தினுடைய காணியைச் சுவீகரித்து அக்காணியில் தற்காலிக குடிசைகள் அமைத்து கடந்த இருபது வருடங்களாக வாழ்ந்து வரும் 19 குடியிருப் பாளர்களுக்கும் அதனை வழங்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்மென்றுகோரி யாழ்ப்பாணம் பதில் அரசாங்க அதிபர் திரு எஸ். பஞ்சலிங்கத்திடம் அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபை மகஜர் ஒன்றை நேரில் கையளித்துள்ளது.

## 30குடும்பங்களுக்கு திருமணப் பதிவு

(புலோலி)

இலங்கை குடும்பத்திட்டச் சங்க திடற்புலம் மாதிரிக்கிராமத்தில் திருமணப் பதிவின்றி குடும்பம் நடாத்திவந்த 30 குடும்பங்களுக்கு ஒரேநாளில் இலங்கைக் குடும்பத்திட்டச் சங்க யாழ். மாவட்ட திட்டமிடல் அதிகாரி திரு, ஏ. எஸ். பூபேந்திரனின் நடவடிக்கையைத் தொடர்ந்து திருமணப் பதிவு நடாத்தப்பட்டது.

இம்முப்பது குடும்பங்களுக்கும் பிள்ளைகள் உள்ளன. ஏழாலை பிறப்பு இறப்பு விவாகப்பதிவுகாரர் திரு. குகதாஸன் திருமணப் பதிவுகளைச் செய்தார். இத்திருமணப் பதிவுக்கான சகல ஒழுங்குகளையும் மாதிரிக் கிராம மாதர் சங்கத் தலைவி திருமதி குணரத்தினம் கைலைவாசன் மேற்கொண்டிருந்தார். (கி)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.